24/02/2026

DVC.01/2021

ம.சா.1 கலைமகள், க/பெ.சசிகுமார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

திருமணத்திற்கு பிறகு நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 2 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தோம். அதன் பிறகு நான் எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழவில்லை என்பதற்காகதான் எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் சரியல்ல. 24.07.2019ம்தேதி எதிர்மனுதாரர் எனக்கு எதிராக விவாகரத்து கோரி வந்தவாசி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால்சரிதான் அவ்வழக்கினை எதிர்த்து நான் கட்சி செய்து வருகிறேன். 4ம் எதிர்மனுதாரர் அவரது குடும்பத்துடன் ராமசமூத்திரம் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர் எரமலூர் கிராமத்தில் வசித்து வருவதற்கான வருவாய்துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் அவர் அங்கு வசித்து வருகிறார். அதேபோல் 5ம் எதிர்மனுதாரர் பொற்கொடி அவர் குடும்பத்துடன் பக்கத்து தெருவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மட்டும்தான் எரமலூர் கிராமத்தில் ஒன்றாக வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, 4ம் எதிர்மனுதாரர் ராஜேஸ்வரியும் அவரது பிள்ளைகளும் சேர்ந்து ஒன்றாகதான் உள்ளார்கள். நான் சொல்வதுபோல் 4ம் எதிர்மனுதாரர் எனது கணவர் குடும்பத்துடன் கூட்டாக சேர்ந்து வாழவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள விவரங்கள் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல அதேபோல் 5ம் எதிர்மனுதாரரின் கணவர் அருணா பேரூந்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறார் சம்பவத்தன்று அவர் பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரும் நானும் ஒருவரை ஒருவர் காதலித்து திருமணம் செய்துகொண்டதால் நான் சொல்வதுபோல் வரதட்சணை ஏதும் கேட்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர் குடும்பம் வசதியான குடும்பம் என்பதால் 1ம் எதிர்மனுதாரரை எனது பெற்றோர் வீட்டில் சேர்ந்து வாழ அழைத்தும் வராததால் மேற்படி எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 1ம் எதிர்மனுதாரருடன் திருமணத்திற்கு பிறகு 4 மாதங்கள் மட்டுமே சேர்ந்து வாழ்ந்துள்ளதால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வசிப்பிட கட்டளை கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேலும் எதிர்மனுதாரர்களை பிரிந்து கடந்த 10 ஆண்டுகளாக சென்னையிலும், எனது தகப்பனார் வீட்டிலும் வசித்து வருவதால் எனக்கு எதிர்மனுதாரருக்கு எதிராக பாதுகாப்பு கட்டளை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மேலும்் எனக்கு எதிராக விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால்் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வீட்டுவாடகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும்் திருமணத்தின்போது எனக்கு சீர்வரிசையாக செய்யப்பட்ட நகைகளை நான் எடுத்துச்சென்றுவிட்டதால் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும் நான்் சென்னையில்் தனியாா் பள்ளியில்் வேலை பார்ப்பதால்் தன்னைத்தானே பராமரித்துக்கொள்ளும் தகுதியிருப்பதால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஜீவனாசம்ச கட்டளை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும் நான் 1ம் எதிர்மனுதாரரை பிரிந்துள்ளதற்கு சரியான காரணங்களை மனுவில குறிப்பிடாததால் இழப்பீடு கட்டளை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு எந்தவித முகாந்திரமும் இல்லாததால் தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

//உண்மை நகல்//

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.